செ.வெ.எண்:671/2019 நாள் : 15.08.2019

## கன்னியாகுமரி மாவட்டம்
## இன்று நடைபெற்ற 73-வது சுதந்திர தின விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, 26 பயனாளிகளுக்கு ரூ.12.33 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், அறிஞர் அண்ணா விளையாட்டரங்க மைதானத்தில் இன்று (15.08.2019) 73-வது சுதந்திர தின விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இவ்விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு, தேசியக்கொடியினை ஏற்றி வைத்து, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.என்.ஸ்ரீநாத் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், காவல்துறையினரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்கள். பின்னர், சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் வண்ண பலூன்களையும் பறக்கவிட்டார்கள்.

இன்று நடைபெற்ற சுதந்திர தினவிழா நிகழ்ச்சியில், முன்னாள் படை வீரர் நலத்துறை சார்பாக, 2 முன்னாள் படைவீரர்களுக்கு ரூ.25 ஆயிரத்துக்கான காசோலைகளும், சமூக பாதுகாப்புத்திட்டத்தின் கீழ், 9 பயனாளிகளுக்கு ரூ.52 ஆயிரத்துக்கான காசோலைகளும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு ரூ.9 ஆயிரத்து 142 மதிப்பிலான சக்கர நாற்காலிகளும், ஆதி திராவிடர் நலத்துறை சார்பாக 2 பயனாளிகளுக்கு ரூ.10 ஆயிரத்து 036 மதிப்பில் இலவச தேய்ப்பு பெட்டியும், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக நீலப்புரட்சித்திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.3 இலட்சத்து 40 ஆயிரத்திற்கான காசோலைகளும், பசுமை வீடு திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.4 இலட்சத்து 20 ஆயிரத்துக்கான காசோலையும், தோட்டக்கலைத்துறை சார்பாக தேசிய தேட்டக்கலை இயக்கத்தின்கீழ் 1 பயனாளிக்கு ரூ.75 ஆயிரம் மதிப்பிலான மினி டிராக்டரும், தாட்கோ மூலம் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் 1 பயனாளிக்கு கறவை மாடு வாங்குவதற்கு மானியமாக ரூ.70 ஆயிரத்து 590-க்கான காசோலையும் மற்றும் படித்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பு பெருக்க திட்டத்தின்கீழ் 1 பயனாளிக்கு ரூ.1 இலட்ச்சத்து 20 ஆயிரத்துக்கான காசோலையும், பட்டுவளர்ச்சித்துறை சார்பாக மாநில திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு நவீன புழு வளர்ப்பு தளவாடங்கள் வாங்குவதற்கு, ரூ.1 இலட்சத்து 5 ஆயிரம் மதிப்பிலான காசோலைகளும், மருத்துவத்துறை சார்பாக தேசிய தொழுநோய் ஒழிப்புத்திட்டத்தின்கீழ் 2 பயனாளிகளுக்கு ரூ.6 ஆயிரத்து 284 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், மாவட்ட அளவில் சிறப்பாக செயல்பட்ட 2 வங்கிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களும் என மொத்தம் 26 பயனாளிகளுக்கு ரூ.12.33 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து, அரசுத்துறைகளில் சிறப்பாக பணியாற்றிய 50 அரசு அலுவலர்களுக்கு நற்சான்றிதழ்களை வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்கத்தை குறித்த பள்ளி மாணவ, மாணவியர்களின் 30 நிமிட கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், திரு.ஹெச்.வசந்தகுமார், எம்.பி, திரு.என்.சுரேஷ் ராஜன் எம்.எல்.ஏ, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி, கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.ஏ.ஆர்.ராஹுல் நாத் இ.ஆ.ப., சார் ஆட்சியர்கள் திரு.விஷ்ணு சந்திரன் இ.ஆ.ப.,(நாகர்கோவில்), திருமதி.சரண்யா அறி இ.ஆ.ப., (பத்மநாபபுரம்), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.மா.சுகன்யா, அரசு உயர் அலுவலர்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.